தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
செல்: 0442272060 9443699066

admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தின கனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

மலர்:03 இதழ்:240 4 பக்கங்கள் 29:03:2026 ஞாயிற்றுக்கிழமை விலை ரூ,6 வருடசந்தா ரூ,1825



வசையொழிய வாழ்வாரே வாழ்வார்
இசையொழிய வாழ்வாரே வாழா தவர்.

**விளக்கம்:**
வசையொழிய வாழுமவர்களே உயிர் வாழ்வாராவர்; புகழொழிய வாழ்வாரே உயிர் வாழாதார். இது புகழில்லார் பிணத்தோ டொப்ப ரென்றது.

## மாநில முதல்வர்களுடன் பிரதமர் மோடி முக்கிய ஆலோசனை



**புதுடெல்லி: மார்ச்,29**

அனைத்து மாநில முதல்வர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக நேற்று முக்கிய ஆலோசனை நடத்தினார். அமெரிக்கா, ஈரான் இடையிலான போரால் உலகம் முழுவதும் கச்சா எண்ணெய், எல்பிஜி, எல்என்ஜி எரிவாயுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவையில் சுமார் 85 சதவீதம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இதேபோல நாட்டின் எல்பிஜி தேவையில் 60 சதவீதமும், எல்என்ஜி தேவையில் 50 சதவீதமும் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.போர் காரணமாக வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய், எரிவாயுவை இறக்குமதி செய்ய முடியவில்லை. இதைத் தொடர்ந்து ரஷ்யாவிடம் இருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய், எல்என்ஜி கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் இருந்து எல்பிஜி இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.தற்போதைய சூழலில் அடுத்த 60 நாட்களுக்கு தேவையான பெட்ரோல், டீசலும், அடுத்த ஒரு மாதத்துக்கு தேவையான எல்பிஜி காஸும் கையிருப்பில் உள்ளது. எனினும் சமூக வலைதளங்களில் பரவும் வதந்திகளால் பல்வேறு பகுதிகளில் செயற்கையான நெருக்கடி எழுகிறது.பிரதமர் நரேந்திர மோடி நாடாளுமன்றத்தில் அண்மையில் பேசும்போது, ‘‘கரோனா பெருந்தொற்று காலத்தை போன்று தற்போதைய நெருக்கடியை மத்திய, மாநில அரசுகள் ஒன்றிணைந்து எதிர்கொள்ள வேண்டும்’’ என்று அழைப்பு விடுத்தார்.இதைத் தொடர்ந்து அனைத்து மாநில முதல்வர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக நேற்று இரவு முக்கிய ஆலோசனை நடத்தினார். இதில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, சத்தீஸ்கர் முதல்வர் விஷ்ணு தியோ சாய், தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி, உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், காஷ்மீர் முதல்வர் ஒமர் அப்துல்லா, பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான், மத்திய பிரதேச முதல்வர் மோகன் யாதவ், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, குஜராத் முதல்வர் பூபேந்திர படேல், மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ராஜ்நாத் சிங் உள்ளிட்டோரும் ஆலோசனையில் கலந்து கொண்டனர். தமிழகம், புதுச்சேரி, கேரளம், மேற்குவங்கம், அசாம் மாநிலங்களில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால் அந்த மாநில முதல்வர்கள் காணொலி கூட்டத்தில் பங்கேற்கவில்லை. எனவே 5 மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களுடன் மத்திய கேபினட் செயலாளர் தனியாக ஆலோசனை நடத்த உள்ளார்.

## ஆக்கிரமிப்பை அகற்றாவிட்டால் தேர்தல் புறக்கணிப்பு வையாவூரில் பொதுமக்கள் போராட்டம்




**மதுராந்தகம்: மார்ச்,29**

மதுராந்தகம் அடுத்த வையாவூரில் தனிநபர் ஒருவர் சாலையை ஆக்கிரமித்து அமைத்துள்ள சுவற்றை அகற்றாவிட்டால், சட்டப்பேரவை தேர்தலை புறக்கணிக்கப் போவதாக பேனர் அமைத்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அடுத்த வையாவூர் கிராமத்தில் படவேட்டம்மன் கோயில் தெருவில் தனிநபர் ஒருவர், சாலையை ஆக்கிரமித்து சுற்றுச்சுவர் அமைத்துள்ளார்.இதனால், அந்தத் தெருவில் வசிக்கும் பொதுமக்கள் தங்களின் குடியிருப்புக்கு செல்ல முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், அப்பகுதியில் இறந்தவர்களின் உடலைக் கூட கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.இப்பிரச்சினை குறித்து வருவாய்த் துறை சார்பில் ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு நோட்டீஸ் வழங்கியும் சுற்றுச்சுவர் அகற்றப்படாமல் உள்ளது.இதனால், வருவாய்த்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஆக்கிரமிப்பு சுவற்றை அகற்றக்கோரி போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ள போலீஸாரைக் கண்டித்தும், சட்டப்பேரவை தேர்தலை புறக்கணிக்கப் போவதாக, அப்பகுதியில் அறிவிப்பு பேனர் வைத்துள்ளனர்.

# திமுக சார்பில் போட்டியிடும் 164 வேட்பாளர்களை அறிவித்தார் ஸ்டாலின் - முழு விவரம்



**சென்னை: மார்ச்,29**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் 164 வேட்பாளர்கள் பட்டியலை கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இதில் 60-க்கும் மேற்பட்ட புதுமுகங்களுக்கு வாய்ப்பு தரப்பட்டுள்ளது. முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர் துரைமுருகன் உட்பட 31 அமைச்சர்களுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், 3 அமைச்சர்கள், 17 மாவட்டச் செயலாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறுகிறது. இதையொட்டி, அனைத்து கட்சிகளும் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு வருகின்றன. அதிமுக ஏற்கெனவே தொகுதிப் பங்கீட்டை முடித்து, 150 தொகுதிகளுக்கு வேட்பாளர்களை அறிவித்துள்ளது. இந்நிலையில், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆளும்கட்சியான திமுக சார்பில் போட்டியிடும் 164 வேட்பாளர்கள் பட்டியலை கட்சித் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் சென்னையில் நேற்று வெளியிட்டார்.

கொளத்தூர் தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலினும், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும் மீண்டும் களம் காண்கின்றனர். தற்போதைய அமைச்சர்களில் காட்பாடியில் துரைமுருகன், திருச்சி மேற்கில் கே.என்.நேரு, ஆத்தூரில் ஐ.பெரியசாமி, திருவண்ணாமலையில் எ.வ.வேலு, குறிஞ்சிப்பாடியில் எம்ஆர்கே.பன்னீர்செல்வம், அருப்புக்கோட்டையில் சாத்தூர் ராமச்சந்திரன், திருச்சுழியில் தங்கம் தென்னரசு, திருமயத்தில் ரகுபதி, ஈரோடு மேற்கில் முத்துசாமி, திருப்பத்தூரில் பெரியகருப்பன், ஆலந்தூரில் தா.மோ.அன்பரசன், காங்கேயத்தில் மு.பெ. சாமிநாதன், தூத்துக்குடியில் கீதா ஜீவன், திருச்செந்தூரில் அனிதா ராதாகிருஷ்ணன், முதுகுளத்தூரில் ராஜ கண்ணப்பன் , சேலம் வடக்கில் ராஜேந்திரன், ஒட்டன்சத்திரத்தில் சக்கரபாணி, சைதாப்பேட்டையில் மா.சுப்பிரமணியன், மதுரை கிழக்கில் மூர்த்தி, குன்னத்தில் எஸ்.எஸ்.சிவசங்கர், சென்னை துறைமுகத்தில் சேகர்பாபு, திருவிடைமருதூரில் கோவி. செழியன், மதுரை மத்தியில் பிடிஆர். பழனிவேல் தியாகராஜன், ஆவடியில் சா.மு.நாசர், திருவெறும்பூரில் அன்பில் மகேஸ், ஆலங்குடியில் மெய்யநாதன், திட்டக்குடியில் சி.வி.கணேசன், மன்னார்குடியில் டிஆர்பி. ராஜா, ராசிபுரத்தில் மதிவேந்தன் ஆகியோர் போட்டியிடுகின்றனர். ராதாபுரத்தில் அப்பாவு, கீழ்பென்னாத்தூரில் கு.பிச்சாண்டி மீண்டும் போட்டியிடுகின்றனர்.

இதில், துரைமுருகன் 13-வது முறையாகவும், சாத்தூர் ராமச்சந்திரன் 12-வது முறையும் தேர்தலில் போட்டியிட உள்ளனர். தற்போதைய அமைச்சர்களான மனோ தங்கராஜ், காந்தி, கயல்விழி செல்வராஜ் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் பொன்முடி, ராமச்சந்திரனுக்கு இந்த முறை வாய்ப்பு வழங்கப்படவில்லை. கயல்விழியின் தாராபுரம் தொகுதியில் இந்திராணி போட்டியிடுகிறார். மனோதங்கராஜின் பத்மநாபபுரம் தொகுதி மார்க்சிஸ்ட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர அமைச்சர் காந்தியின் மகன் வினோத் காந்தி, ராணிப்பேட்டைக்கும், பொன்முடியின் மகன் கவுதம சிகாமணி திருக்கோவிலூர் தொகுதிக்கும் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளனர். ராயபுரம் தொகுதியில் முன்னாள் அமைச்சர் ரகுமான்கானின் மகன் சுபேர்கான், தியாகராய நகரில் மறைந்த முன்னாள் எம்எல்ஏ ஜெ.அன்பழகனின் மகன் ராஜாவும் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சந்திரன், தேவராஜ், செல்வராஜ் உட்பட மாவட்டச் செயலாளர்களில் 19 பேருக்கு வாய்ப்பு தரப்படவில்லை.

தொகுதி மாறிய செந்தில் பாலாஜி: கடந்த முறை கரூர் தொகுதியில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, தற்போது கோவை தெற்கு தொகுதியில் போட்டியிடுகிறார். முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், செஞ்சி தொகுதியில் போட்டியிடுகிறார். அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியை எதிர்த்து எடப்பாடி தொகுதியில் புதிய முகமான காசி களமிறக்கப்பட்டுள்ளார்.

அதிமுகவில் இருந்து திமுகவில் இணைந்த முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் (போடி), வைத்திலிங்கம் (ஒரத்தநாடு), மனோஜ் பாண்டியன் (ஆலங்குளம்), தோப்பு வெங்கடாசலம் (பெருந்துறை) ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. உதயநிதி ஸ்டாலின் (சேப்பாக்கம்), கார்த்திக் மோகன் (வில்லிவாக்கம்), கலை கதிரவன் உட்பட 12 வாரிசுகளுக்கு இத்தேர்தலில் வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தொகுதியில் திமுக சார்பில் மகாராஜன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். இந்த தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிடும் லோகிராஜன் இவரது சகோதரர் ஆவார். ஒரே தொகுதியில் அண்ணன் - தம்பி இருவரும் களமிறங்குகின்றனர்.

திமுக வேட்பாளர்களில் 125 பேர் பட்டதாரிகள், 18 பெண்கள், 7 முனைவர்கள், 15 டாக்டர்கள், 17 பொறியியல் பட்டதாரிகள், 29 வழக்கறிஞர்கள், 4 முஸ்லிம்கள், 60-க்கும் மேற்பட்ட புதிய முகங்கள் இடம்பெற்றுள்ளனர். சென்னை மாவட்டத்தில் உள்ள 16 தொகுதிகளில் 15-ல் திமுக போட்டியிடுகிறது. இதில் தற்போதைய எம்எல்ஏக்கள் தியாகராய நகர் கருணாநிதி, அண்ணா நகர் மோகன்,ராயபுரம் ஐட்ரீம் மூர்த்தி, வில்லிவாக்கம் வெற்றியழகன், திரு.வி.க. நகர் தாயகம்கவி, எழும்பூர் பரந்தாமன் ஆகியோருக்கு பதிலாக புதுமுகங்கள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலவரப்படி, ஒட்டுமொத்தமாக 121 தொகுதிகளில் திமுக - அதிமுக இடையே நேரடி போட்டி உள்ளது. அதேபோல, திமுக - பாஜக 18 தொகுதிகளிலும், பாமக மற்றும் அமமுகவுடன் தலா 8 தொகுதிகளிலும் திமுக மோதுகிறது.

‘உதயசூரியன்’ சின்னத்தில் 175 பேர்: திமுகவின் 164 வேட்பாளர்கள் மட்டுமின்றி, கூட்டணியில் உள்ள சிறு கட்சிகளின் 11 வேட்பாளர்களும் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றனர்.திமுக வேட்பாளர் பட்டியலை வெளியிட்ட பிறகு, சென்னை மெரினா கடற்கரையில் உள்ள முன்னாள் முதல்வர்கள் அண்ணா, கருணாநிதி நினைவிடங்களுக்குச் சென்று முதல்வர் ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் உடன்இருந்தனர். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய உதயநிதி, ‘‘சேப்பாக்கம் தொகுதியில் மீண்டும் போட்டியிடுகிறேன். சேப்பாக்கம் மக்கள் மீண்டும் எனக்கு வாய்ப்பு அளிப்பார்கள் என நம்புகிறேன். இளைஞர்கள் அதிக அளவில் அரசியலுக்கு வரவேண்டும் என்பதற்காகவே புதிய முகங்களுக்கு வாய்ப்பு தரப்பட்டுள்ளது. மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் நிச்சயம் நீட் தேர்வு ரத்து செய்யப்படும்’’ என்று தெரிவித்தார்.

# “அதிமுக கூட்டணி 210 தொகுதிகளில் வெல்லும்; இபிஎஸ் முதல்வராவார்” - எஸ்.பி.வேலுமணி



**கோவை: மார்ச்,29**

“தமிழகம் முழுவதும் அதிமுக கூட்டணி 210 தொகுதிகளில் வென்று எடப்பாடி பழனிசாமி முதல்வராவார்” என முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தெரிவித்தார்.

அதிமுக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட பின் முதன்முறையாக கோவை வந்த, முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணிக்கு இன்று கோவை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரை, கோவை மாவட்டத்தின் அதிமுக வேட்பாளர்கள் மற்றும் தொண்டர்கள் மேளதாளங்கள் முழங்க வரவேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த எஸ்.பி.வேலுமணி, “எடப்பாடி பழனிசாமி வெற்றிகரமான, வலுவான கூட்டணியை அமைத்து கோவை, திருப்பூர், நீலகிரி உட்பட அனைத்து மாவட்டங்களுக்கும் அதிமுக வேட்பாளர்களை அறிவித்துவிட்டார். கோவை மாவட்டம் என்றைக்குமே அதிமுகவின் கோட்டை. 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கோவை ஜெயலலிதாவின் ஆட்சியிலும், இபிஎஸ்சின் ஆட்சியிலும் வளர்ச்சியடைந்தது.

அதிமுக ஆட்சியில் கேட்ட திட்டங்களெல்லாம் கோவைக்கு வழங்கப்பட்டது. இதனால் கோவை மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்தது. கடந்த 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் கோவைக்கு எந்த திட்டங்களும் வழங்கப்படவில்லை. அவிநாசி உட்பட கோவையின் 11 தொகுதிகளிலும், திருப்பூர், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் அதிமுக கூட்டணி முழுமையாக வெற்றிபெறும். தமிழகம் முழுவதும் அதிமுக கூட்டணி 210 தொகுதிகளில் வென்று எடப்பாடி பழனிசாமி முதல்வராக வருவார்.

# திருவாடானை சட்டமன்ற தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் ஆதரித்து சாட்டை துரைமுருகன் பரப்புரை!




திருவாடனை. மார்ச், 29

5050 தலைமுறைகளுக்கு சம்பாதித்தவர்களுக்கா உங்கள் ஓட்டு? அடுத்த தலைமுறைகளுக்குஇயற்கைவளத்தை காக்கும் நாம் தமிழருக்கு வாக்கு கேட்டு பரப்புரை

ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தாலுகா தொண்டி புதிய பேருந்து நிலையம் அருகில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் ஆதரித்து சாட்டை துரைமுருகன்திருவாடானை சட்டமன்ற தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் பிரேம் நாத் ஐ ஆதரித்து பரப்பரையாற்றினார். அப்போது பேசியவர் திருவாடானை சட்டமன்ற தொகுதி எம்எல்ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்ட கருமாணிக்கம் மக்களை சந்திக்கவே இல்லை என்றும், அதிமுக திமுக கட்சியினர் இணைந்து கொள்ளையடிக்கின்றனர் அதற்கு மாற்றாக நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டும் எனவும், திமுகவினர் ஐந்தாண்டு ஆட்சிக்காலத்தில் 550 தலைமுறைகளுக்கு பல ஆயிரம் கோடி சொத்துக்களை சேர்த்துள்ளனர் என்றும், சி ஏ ஏ, நீட் உள்ளிட்ட அனைத்து விதமான சட்டங்களையும் காங்கிரஸ் கட்சிதொடங்கி வைத்தது என்றும் அதனை பிஜேபி அமுல்படுத்தியது என்றும் இரண்டுதேசிய கட்சிகளும் சேர்ந்து இணைந்து கொண்டு மக்களை வஞ்சித்து வருகினர் என்றும் அவர்களுக்கு மாற்றாக நாம் தமிழர் கட்சியை ஆதரிக்க வேண்டும் பரப்பரையாற்றினார். அதனை தொடர்ந்து சாட்டை துரைமுருகன் மேடையில் வைத்து திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் பிரேம்நாத், முதுகுளத்தூர்சட்டமன்ற வேட்பாளர் மருத்துவர் பேராசிரியர்சந்திரபிரபா, பரமக்குடி வேட்பாளர் மருத்துவர் எழில் இளவரசி, ராமநாதபுரம் வேட்பாளர் பொறியாளர் முத்து கேசவன் ஆகியோர்களை அறிமுகப்படுத்தி வைத்தார்.

# “உடற்தகுதி தான் காவல்துறையின் வலிமை” – திருப்பத்தூரில் ஆயுதப்படை காவலர்களுக்கு எஸ்.பி. அறிவுரை!





திருப்பத்தூர், மார்ச் 29:

திருப்பத்தூர் மாவட்ட காவல்துறையின் சார்பில், 28.03.2026 அன்று மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் ஆயுதப்படை காவலர்களுக்கான கவாத்து மற்றும் உடற்பயிற்சி நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி V. சியாமளா தேவி அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். காவலர்களின் ஒழுங்கு முறை நடை, உடற்பயிற்சி திறன் மற்றும் ஒற்றுமையை அவர் கவனமாக மதிப்பீடு செய்தார்.

பின்னர் காவலர்களிடம் உரையாற்றிய அவர், “ஒரு காவலரின் திறன் மற்றும் செயல்திறன், அவரது உடற்தகுதியை அடிப்படையாகக் கொண்டது. தினசரி உடற்பயிற்சி மூலம் உடல் ஆரோக்கியத்தையும், மன உறுதியையும் மேம்படுத்திக்கொள்ள வேண்டும்” என அறிவுறுத்தினார்.

மேலும், ஒழுக்கம், நேர்த்தி மற்றும் உடற்தகுதி ஆகியவை காவல்துறையின் அடையாளங்களாக இருப்பதால், அவற்றை தொடர்ந்து பேணிக்காக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வு காவலர்களுக்கு புத்துணர்ச்சி அளிப்பதோடு, தங்களின் பணியில் மேலும் திறமையாக செயல்பட ஊக்கமளித்ததாக கூறப்படுகிறது.

# இராமநாதபுரம் சட்டமன்றதொகுதி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு!

## கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தகவல்!!



இராமநாதபுரம், மார்ச்.29–

மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்திக் குறிப்பில் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் செய்யதுஅம்மாள் மெட்ரிக் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், சட்டமன்றபொதுத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு, வாக்குப்பதிவுநாளன்றுவாக்குச்சாவடிஅலுவலர்கள் மேற்கொள்ளவேண்டிய பணிகள் தொடர்பாக இராமநாதபுரம் சட்டமன்றதொகுதி (211) அலுவலர்களுக்கானமுதற்கட்டபயிற்சிவகுப்பு நடைபெற்றதை மாவட்டதேர்தல் அலுவலர் மாவட்டஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், பார்வையிட்டுதேர்தல் ஆணையவழிகாட்டுதலின் விதிமுறைகளைசரியாக பின்பற்றஅறிவுறுத்தியதுடன், பயிற்சியின் போதுமேற்கொள்ள வேண்டியபணிகள்நல்ல முறையில் தெரிந்து கொண்டுசிறப்பாகபணியாற்றியவிடவேண்டும் என, மாவட்டதேர்தல் அலுவலர் மாவட்டஆட்சித்தலைவர்அவர்கள் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாவட்டதேர்தல் அலுவலர்அவர்கள், (210) திருவாடானை(209)பரமக்குடிதனி, (212) முதுகுளத்தூர் ஆகிய இடங்களுக்குசென்று வாக்குச்சாவடி அலுவலர்களுக்குமுதற்கட்டபயிற்சிநடைபெற்றதை பார்வையிட்டுஒவ்வொருவரும் பயிற்சியில் உரியசந்தேகங்களைதெரிந்துகொண்டு, சிறந்தமுறையில் வாக்குப்பதிவு நாளன்றுபணியாற்றிட வேண்டுமெனமாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்டஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டவருவாய் அலுவலர் (தேசியநெடுஞ்சாலை) புகாரிஅவர்கள், மாவட்டமுதன்மைகல்விஅலுவலர் திருமதி.ரெஜினிஅவர்கள், இராமநாதபுரம் சட்டமன்றதொகுதிக்கானதேர்தல் நடத்தும் அலுவலர் செ.ஹபிபூர் ரஹ்மான் அவர்கள், இராமநாதபுரம் வட்டாட்சியர் காளீஸ்வரன் அவர்கள் மற்றும் அரசுஅலுவலர்கள் உட்படபலர் கலந்துகொண்டனர்.




திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம். கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதிக்குட்டப்பட்ட ஓதப்பை பகுதியில் செயல்படும் தனியார் தொழிற்சாலையில் "தேர்தல் திருவிழாதமிழ்நாட்டின் பெருவிழா" சட்டமன்ற பொது தேர்தல்2026யை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி கையெழுத்து இயக்கத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், கையெழுத்திட்டு துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்/இணை இயக்குநர் வை.ஜெயக்குமார். கும்மிடிப்பூண்டி தேர்தல் நடத்தும் அலுவலர்/தனித்துறை ஆட்சியர் (ச.பா.தி) வெங்கடேஷன், உதவி இயக்குநர் (பயிற்சி)bமோகன். உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்/ஊத்துக்கோட்டை வட்டாட்சியர் ராஜேஷ். தனியார் தொழிற்சாலை பிரிதிகள், பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# ஸ்ரீ கோதண்டராமர் ஆலயத்தில் ஸ்ரீராமநவமி பெருவிழா!



செங்குன்றம், மார்ச் :29

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் புதிய எருமைவெட்டி பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ கோதண்டராமர் ஸ்வாமி ஆலயத்தில் ஸ்ரீராமநவமி பெருவிழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.


நிகழ்ச்சியில் மூலவர்களுக்கு பால், தயிர், இளநீர், பன்னீர், சந்தனம், தேன், ஜவ்வாது உள்ளிட்டபல்வேறுவாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து பின்னர் வண்ணமலர்கள் மற்றும் திரு ஆபரணங்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாரதனை காண்பிக்கப்பட்டது.

பின்னர் மேளதாள வாத்தியத்துடன் மூலமந்திரங்கள் முழங்க கிராம பொதுமக்கள் முன்னிலையில் ஸ்ரீராமநவமி வைபவம்நிகழ்ச்சி வெகு விமர்ச்சியாக நடைபெற்றது.

அத்துடன் ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி புகழை போற்றும் வகையில் ஆன்மீக சிந்தனைகள் கொண்ட சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது.

இவ்விழாவிற்கு முன்னாள் கவுன்சிலர் தீபாநாகராஜ், ஆத்தூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் சற்குணன் உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம்செய்தனர். முடிவில் ஆலயம் மற்றும் திருமலை நண்பர்கள் குழுவினர்கள் முழு ஒருங்கிணைப்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது.

# திருவாவடுதுறை ஸ்ரீ பிரஹன்னாயகி அம்மன் ஊஞ்சல் உற்சவம் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் பங்கேற்பு!



மயிலாடுதுறை.மார்ச், 29

மயிலாடுதுறை மாவட்டம் திருவாவடுதுறை வடக்கு மடவிளாகத்தில் எழுந்தருளிஅருள்பாலிக்கும் ஸ்ரீ பிரஹன்னாயகி அம்மன் ஆலய 71 ஆம் ஆண்டுதிருநடனப்பெருவிழாவெகுவிமர்சையாக நடைபெற்று முடிந்தது முன்னதாக கடந்த 17 ஆம் தேதி ஆற்றங்கரையிலிருந்து சக்தி கரகம் புறப்பட்டு ஆலயத்தை வந்தடைந்தது பின்னர் 18 ஆம் தேதி அதிகாலை காப்பு கட்டுதலுடன் தொடங்கிய திருநடனப் பெருவிழா கோயில் சன்னதியில் இருந்து புறப்பட்டு பிறந்த இடத்திற்கு சென்றது அதனைத் தொடர்ந்து வழியெங்கும் கும்மியாட்டம் மகுடி ஆட்டம் அம்மன்பாட்டு ஆகிய நடனம் நடைபெற்று வந்தன கடந்த செவ்வாய்க்கிழமை திருநடன உற்சவம் நிறைவு பெற்றது விழாவின் முக்கிய நிகழ்வாக ஊஞ்சல் உற்சவம் வெள்ளிக்கிழமை திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் முன்னிலையில் வெகு விமர்சையாக நடைபெற்றது பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து

பிரஹன்னாயகி அம்மனை பக்தர்கள் வழிபட்டுச்சென்றனர்தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டன.

### சாத்தூர் அருகே

# வாகன சோதனையில் ரூ.1லட்சம் மதிப்பிலான பட்டாசு பறிமுதல்!

சாத்தூர். மார்ச்.29

தமிழகத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு 2026 சட்டமன்ற பொது தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றனர்.

வெம்பக்கோட்டை அருகே துலுக்கன்குறிச்சி பகுதியில் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டு வந்தனர் அப்போது அந்த வழியாக வந்த லோடு வேனை மறித்து சோதனையிட்ட போது அதில்

1லட்சம் மதிப்பிலான பேன்சி ரக வெடிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

சோதனை அலுவலர் நடத்திய விசாரணையில் லோடு வேனை ஓட்டி வந்தவர் பெரிய பொட்டல் பட்டி பகுதியைச் சேர்ந்த மாதேஸ்வரன் (21) மற்றும் அவருடன் வந்த சிவகாசி பகுதியைச்சேர்ந்தசந்தோஷ்(23) மற்றும் துலுக்கப்பட்டி பகுதியைச் சேர்ந்த குரு விக்னேஷ் (19)என்பது தெரியவந்தது எனினும் உரிய ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் பட்டாசுகளை பறிமுதல் செய்து வெம்ப க்கோட்டை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. மேலும் பட்டாசுகளை பறிமுதல் செய்து அனுமதி இன்றி பட்டாசு ஏற்றி வந்த மூன்று பேர் மீது வழக்கு பதிவு செய்து அவர்களை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கமுதி அருகே தேவர் கல்லூரியில் விளையாட்டு நாள் கொண்டாட்டம்!

இராமநாதபுரம். மார்ச், 29

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகேயுள்ள பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவு கல்லூரியில் 56 வது கல்லூரி நாள்மற்றும் விளையாட்டு நாள் கொண்டாட்டம் நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர் முனைவர் தர்மர் மற்றும் சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு தலைமை ஏற்று விழாவை சிறப்பித்தனர். இந்தவிழாவிற்காக



ஒரு வாரகாலமாக போட்டிகளை நடத்தி மாணவர்களை தேர்ந்தடுத்தனர். இதனைஉடற்கல்வி ஆசிரியர் முனைவர் சிவராமகிருஷ்ணன், ஆங்கில துறை தலைவர் பிரபு, பேராசிரியர் அலி அல் குதாயா ஆகியோர் சிறந்த முறையில் மாணவர்களை தேர்ந்தெடுத்தனர். இதில் சென்ற வருடம் அனைத்து போட்டிகளிலும் சிறந்த இடங்களை பெற்று ஒவரால் சாம்பியன் பட்டத்தை வென்ற ஆங்கிலத்துறைஇந்தவருடமும் சாம்பியன் பட்டத்தை வென்று, சாம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டது.

தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் சாம்பியன் பட்டத்தை வென்றது. ஆங்கிலத்துறை இதில் துறை தலைவர் பிரபு, பேராசிரியர் அலி அல் குதாயா, பேராசிரியர் இந்து ராணி போன்றவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.



வேலூர் அடுத்த காட்பாடி சித்தூர் பஸ் நிலையம் அருகில் உள்ள ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் கோயிலில் ஸ்ரீராமநவமியை முன்னிட்டு காலையில் சிறப்பு திருமஞ்சனம் நடந்தது. மாலையில் விசேஷ பூஜைகள் நடத்தப்பட்டு தொடர்ந்து மோர், பானகம்,இனிப்பு சாதம், புளியோதரை உள்ளிட்ட பிரசாதங்கள் வழங்கப்பட்டன. அலங்காரத்தைகோயில்அர்ச்சகர்கண்ணன்பட்டாச்சாரியர் செய்துஇருந்தார்.ஏற்பாடுகளைகாட்பாடிபக்தஆஞ்சநேய அறக்கட்டளை செய்து இருந்தது.

### விறகு பொறுக்க சென்ற

# சத்துணவு சமையலரிடம் அத்துமீறிய வாலிபர் கைது!

## உடன்குடி அருகே சம்பவம்!!

உடன்குடி.மார்ச்.29


உடன்குடி அருகே யுள்ள சிறுநாடார்குடியிருப்பைச்சேர்ந்தவர்முத்துலிங்கம் மனைவி அமுதா(54) தம்பதியினருக்கு 5பெண், 2ஆண் பிள்ளைகள் உள்ளனர். முத்துலிங்கம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டார். அமுதாமாதவன் குறிச்சி சத்துணவு மையத்தில் சமையலாராக வேலை பார்த்து வருகிறார். இந்நிலையில் கடந்த 25ம்தேதி மாலை விறகு பொறுக்குவதற்காக சிறுநாடார்குடியிருப்பு பெரிய புரம் செல்லும்பிரிவுசாலையில் உள்ள இசக்கியம்மன்கோயில் அருகே சென்றுகொண்டிருந்துள்ளார். அப்போது டூவிலரில் சுமார் 30வயது மதிக்க தக்க வாலிபர் அமுதாவிடம் வழி கேட்பது போல் பேசி அவரது வாயை பொத்தி, அத்துமீறி நடந்து பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

வாலிபரிடமிருந்து தப்பிக்க மல்லுகட்டிய அமுதா அவரை தாக்கி அங்கிருந்து ஊருக்குள் ஓடி வந்துள்ளார். இந்நிலையில் அவர் அணிந்திருந்த செயின் தங்கசெயின் என எண்ணி பறித்து சென்றதும் தெரியவந்தது. இதுகுறித்து பாதிக்கப்பட்ட அமுதா குலசேகரன்பட்டினம் போலீசில் புகார் செய்தார். புகாரின்பேரில்போலீசார் தொடர்ந்து சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து விறகு பொறுக்க சென்ற பெண்ணிடம் அத்துமீறி செயினை பறித்து சென்ற வாலிபரை பிடித்து விசாரித்தனர்.

விசாரணையில் அவர் சாத்தான்குளம் அருகேயுள்ள பள்ளிபத்தைச் சேர்ந்த முருகேசன் மகன் யோகேஸ்வரன்(28) என்பது தெரியவந்தது.

இதனையடுத்து வாலிபரை போலீசார் கைது செய்து விசாரணைநடத்திவருகின்றனர்.

# வேலூர் அடுத்த காட்பாடி சட்டமன்ற அதிமுக வேட்பாளர் ராமு அறிமுக கூட்டத்தில் பங்கேற்ற முன்னாள் அதிமுக அமைச்சர் வீரமணி உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் பங்கேற்பு!



**வேலூர், மார்ச், 29:**
வேலூர் மாவட்டம் காட்பாடியில் அதிமுக சார்பில் வி.ராமு, வேலூரில் எஸ் ஆர்கே அப்பு. குடியாத்தத்தில் பபிதா ஆகியோர் வரும் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

காட்பாடி சட்டமன்ற வேட்பாளர் வி.ராமு அறிமுக கூட்டம் சித்தூர் பஸ் நிலையம் அருகில் தனியார் திருமண மண்டபத்தில் நடந்த நடந்தது. இதில் முன்னாள் அதிமுக அமைச்சர்கே.சி.வீரமணிகலந்துகொண்டு பேசினார். இதில் தேசிய ஜனநாயக கூட்டணி அதிமுக சார்பில் வேட்பாளர் வி.ராமு, வேலூர் வேட்பாளர் எஸ்.ஆர். கே.அப்பு. மாவட்ட பொருளாளர் மூர்த்தி, காட்பாடி ஒன்றிய செயலாளர்கள்சுபாஸ், சின்னதுரை, காட்பாடி பகுதி செயலாளர் நாராயணன், மாநகர அமைப்புசாரா ஓட்டுநர் அணி தலைவர் பிரகாசம், முன்னாள் சோளிங்கர் ஒன்றிய செயலாளர் ஆனந்தன், காட்பாடி மத்திய விவசாய அணிசெயலாளர் மோகன்பாபு, வண்டறந்தாங்கல் பஞ்சாயத்து தலைவர் ராகேஷ், பிஜேபி சார்பில் மாநில பொதுச்செயலாளர் கார்த்தியாயிணி, மாவட்ட தலைவர் தசரதன், பாமக சார்பில் முன்னாள் மத்திய இணை அமைச்சர் சண்முகம், மாவட்ட செயலாளர் ஜெகன், அமமுக சார்பில் காட்பாடி சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் சதீஷ்குமார், காட்பாடி மத்திய ஒன்றிய செயலாளர் பாபு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு!




**திண்டுக்கல். மார்ச், 29**
திண்டுக்கல்மாவட்டம்நத்தம்சட்டமன்றத்தொகுதி தொகுதிக்கு உட்பட்ட பொதுமக்களிடையே வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் வட்ட வழங்கல் அலுவலர் பாமா தலைமையில் ஆர். ஹெச்.ஜெயந்தி கேஸ் ஏஜென்சி மூலம் மக்களுக்கு கொண்டு செல்லும் சிலிண்டர் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

### வனத்துறையால் கிடப்பில் போடப்பட்ட

# செங்குளம் முதல் நரியூத்து தார் சாலையை மீண்டும் புதுப்பிக்க வேண்டும்!

## பொதுமக்கள் கோரிக்கை!!

**வருசநாடு, மார்ச்.28**
தேனி மாவட்டம் கடமலைமயிலை ஒன்றியம் மயிலாடும்பாறை அருகே செங்குளம் நரியூத்து இடையே தார்ச் சாலை அமைக்க கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பணிகள் தொடங்கிது. ஆனால் வனத்துறையினர்தடை விதித்ததால் சாலைப் பணிகள் பாதியிலேயே முடங்கியது.

இதனால் தற்போது வரை செங்குளம்நரியூத்து இடையே தார் சாலை அமைக்கப்படாமல் உள்ளது. தொடர் கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எடுக்கப் படாத நிலையில் ஆத்திரமடைந்த நரியூத்து கிராம மக்கள், தங்களுக்கு இலவச பட்டா வழங்க வேண்டும் மற்றும் சாலைப் பணிகளை உடனடியாக முடிக்க வேண்டும் இல்லையெனில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலை புறக்கணி க்கப் போவதாகக் கூறி கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு ஊர் எல்லையில் அறிவிப்புப் பலகை வைத்தனர். இந்த நிலையில், போராட்டம் தொடங்கி நேற்றுடன் 100 நாட்கள் கடந்தும் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதைக் கண்டிக்கும் வகையில், நேற்று இரவு அந்த அறிவிப்புப் பலகைக்கு மாலை அணிவித்தும், இனிப்புகள் வழங்கியும் பொதுமக்கள் நூறாவது நாள் விழாவைக் கொண்டாடினர். அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் அடுத்தடுத்து தொடர் போராட்டங்களில் ஈடுபடப் போவதாகவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

# வாய்க்காலில் குளித்த கூலி தொழிலாளி பலி!

**கோபி, மார்ச் 29**
கோபி அருகே அயலூார், அண்ணா நகர் குடியிருப்பை சேர்ந்த கூலி தொழிலாளி குப்பன், 51; அதே பகுதியில் கீழ்பவானி வாய்காலில் குளிக்க, சென்றவர் வீடு திரும் பாததால், குடும்பத்தார் வாய்க் கால் கரையில் சென்று பார்த்த னர்.

குப்பனின் ஆடை மற்றும் செருப்பு மட்டும் கரையில் இருந்தது. இந்நிலையில் அதே பகுதியில் நேற்று காலை குப் பனின் உடல் கரையில்ஒதுங்கியது. இதுகுறித்து போலீசார் விசாரணை செய்து வருகின்றனர் .




கோவை அரசூர் பகுதியில் உள்ள, கே.பி.ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியில் 20212024 ஆம் கல்வியாண்டில் பயின்ற மாணாக்கர்களுக்கு மூன்றாவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்வினைக் கல்லூரியின் செயலர் காயத்ரி அனந்தகிருஷ்ணன்தொடங்கிவைத்தார். கே.பி.ஆர்குழுமத்தின்தலைவர் டாக்டர்கே.பி. இராமசாமி கலந்து கொண்டு பட்டம் பெறும் மாணவர்களை வாழ்த்தினார். கல்லூரி முதல்வர் முனைவர் பி.கீதா ஆண்டறிக்கை வாசித்தார். இந்தியத் தொழில் நுட்பக் கழகத்தின் இயக்குநர் முனைவர் வி.காமகோடி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவ, மாணவியருக்குப் பட்டமளித்துச் சிறப்புரை வழங்கினார்.




மாணவர்களின் திறமைகள், சாதனைகள் மற்றும் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் விதமாக நடைபெற்ற இதில், ஃபர்ஸ்ட் க்ரை கல்வி நிறுவனத்தின் தாளாளர் டாக்டர் ஆ. கிறிஸ்டோபர் பால் அனைவரையும் வரவேற்று பேசினார். தொடர்ந்து நடைபெற்ற விழாவில் பள்ளியின்தாளாளர் கிறிஸ்டோபர் மற்றும் முதல்வர் ஏஞ்சலின் கிறிஸ்டோபர் ஆகியோர் இணைந்து சிறப்பு விருந்தினர்களுக்கு மலர் கொத்து வழங்கி வரவேற்றனர்..



சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026ஐ முன்னிட்டு, வாக்குச்சாவடி மையங்களில் பல்வேறு நிலைகளில் பணிகள் மேற்கொள்ளவுள்ள அலுவலர்களுக்கான நடைபெற்ற பயிற்சி வகுப்பு தொடர்பாக, சிவகங்கை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மன்னர் துரைசிங்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி நேரில் பார்வையிட்டு, வாக்குச்சாவடிகளில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் மற்றும் பணிகள் குறித்து எடுத்துரைத்தார். உடன் 186 சிவகங்கை சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் செல்வி தே.ஜெஃபி கிரேசியா, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் சிவராமன் உட்பட பலர் உள்ளனர்.

### கடையநல்லூர்–வாசுதேவநல்லூர் தொகுதிகளில்

# கேரள வியாபாரி உட்பட 2 பேரிடம் ரூ. 2 லட்சத்து 10 ஆயிரம் பறிமுதல்!

## பறக்கும் படையினர் நடவடிக்கை!!

**நெல்லை, மார்ச். 29**
தமிழக சட்டமன்றத் தேர்தல் அறிவிப்பு வெளியானதை தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் வெளியானது. இதனால் 50 ஆயிரத்திற்கு மேல் பணத்தை கொண்டு செல்பவர்கள் தகுந்த ஆவணங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டும் என தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதைத்தொடர்ந்து வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் விநியோகத்தை தடுப்பதற்காக பறக்கும் படை அமைக்கப்பட்டு தீவிர சோதனை நடந்து வருகிறது. இந்த நிலையில் தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மங்களாபுரம் ரயில்வே கேட் பகுதியில் யூனியன் அலுவலக பொறியாளர் ராமசாமி தலைமையிலான பறக்கும் படையினர் நேற்றிரவு வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக மாவடிக்கால் பகுதியைச் சேர்ந்த சக்திவேல் முருகன் (50) என்பவர் பைக்கில் வந்தார். அவர் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்து வருவதாக கூறப்படுகிறது. இதையடுத்து அவரது பைக்கை நிறுத்தி போலீசார் சோதனை செய்ததில் ரூ.54 ஆயிரத்து 750 பணம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கான ஆவணங்கள் அவரிடம் இல்லாததால் பறக்கும் படையினர் பணத்தை பறிமுதல் செய்தனர். பின்னர் உரிய ஆவணங்களை காண்பித்து பணத்தை பெற்றுக் கொள்ளுமாறு கூறி கடையநல்லூர் தாலுகா அலுவலக தாசில்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதே போல் மற்றொரு சம்பவத்தில் இன்று அதிகாலை வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாடிக் கோட்டை விலக்கு ராஜபாளையம் மெயின் ரோடு பகுதியில் கடையநல்லூர் கூட்டுறவு கணக்காளர் சபியுல்லா தலைமையில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த கேரளா பதிவெண் கொண்ட சரக்கு வாகனத்தை வழிமறித்து நிறுத்தினர். அதில் கேரள மாநிலம் பாலக்காடு பகுதியைச் சேர்ந்த சுல்தான் (59) என்ற வியாபாரி இருந்தார். அவரிடம் இருந்த பையை சோதனை செய்ததில் ரூ.1 லட்சத்து 56 ஆயிரம் பணம் இருந்தது. ஆனால் அதற்கான ஆவணங்கள் எதுவும் அவரிடம் இல்லாததால் பணத்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். அதன் பின்னர் சிவகிரி தாலுகா அலுவலக தாசில்தாரிடம் பணம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் உரிய ஆவணங்களை காண்பித்து பணத்தை திரும்ப பெற்று செல்லுமாறு கூறினர்.

# "தேர்தல் பணிக்கு ஆயத்தம்" - திருப்பத்தூரில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு தீவிர பயிற்சி!





**திருப்பத்தூர். மார்ச், 29**
திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட துயா நெஞ்சக் கல்லூரியில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முக்கியமான பயிற்சி கூட்டம் நடைபெற்றது.

இந்த பயிற்சி நிகழ்ச்சி 23 ஏப்ரல் 2026 அன்று நடைபெற உள்ள தேர்தலை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் Presiding Officer (PO, PO1, PO2, PO3) ஆகிய பொறுப்புகளில் பணியாற்றவுள்ள அலுவலர்கள் கலந்து கொண்டு, தேர்தல் நாளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள், நடைமுறைகள் மற்றும் வழிமுறைகள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இந் நி க ழ் வி ல் , மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் திரு/திருமதி தலைமையில் நடைபெற்ற பயிற்சியில், 28.03.2026 அன்று பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். குறிப்பாக, வாக்குச்சாவடிகளில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், வாக்குப்பதிவு செயல்முறை, EVM மற்றும் VVPAT கருவிகள் பயன்படுத்தும் முறை ஆகியவைகுறித்து தெளிவான வழிகாட்டுதல்கள்வழங்கப்பட்டன.

மேலும், தேர்தல் பணிகளில் துல்லியம் மற்றும் வெளிப்படைத்தன்மை அவசியம் என்பதை வலியுறுத்திய அலுவலர்கள், ஒவ்வொரு அலுவலரும் தங்களது பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டும் என அறிவுறுத்தினர். இந்த பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட அலுவலர்கள் உற்சாகமாக கலந்து கொண்டு, தேர்தல்பணிக்கான தங்களது தயாரிப்பை மேலும் வலுப்படுத்திக் கொண்டனர்.

# ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தில் ஸ்ரீசீதா ஸ்ரீராமர் திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி!



**செங்குன்றம், மார்ச் 29**
மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி சோத்துப்பாக்கம் கிராமம் ஸ்ரீ ஜெயதுர்கா நகரில் அமைந்துள்ள அருள் மிகு ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தில் ஸ்ரீராமநவமி முன்னிட்டு ஸ்ரீசீதா ஸ்ரீராமர் திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி ஆலய நிர்வாகிகள் சுரேஷ், ரஜினி, பிரபு, லதாபிரபு, சரவணன், பாலாஜி, பாபு ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. / நிகழ்ச்சியில் புன்யாகவாசனம், சங்கல்பம், கலச ஆவாஹனம், விஷ்ணு சகாஸ்ரநாம பாராயணம், ஸ்ரீபஞ்ச சுக்த ஹோமம், மற்றும் மூலவர் பஞ்சமுக ஆஞ்ச நேயருக்கும், ஸ்ரீசீதாதேவி ஸ்ரீராமர் உற்சவருக்கும் பல்வேறு வாசனை திரவியங்கல் அபிஷேகம் செய்து மகா தீபாரதனை காண்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேளதாள வாத்தியத்துடன் மூலமந்திரங்கள் முழங்க ஊர் பொதுமக்கள் முன்னிலையில் ஸ்ரீசீதா ஸ்ரீராமர் திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி வெகு விமர்ச்சியாக நடைபெற்றது.

பின்னர் ஸ்ரீ விஷ்ணு ஸஹாஸ்ரநாம பாராயணம் மற்றும் நடனக் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.

### தென்காசி அருகே இலத்தூரில்

# சீர்வரிசையுடன் தேர்தல் திருவிழா அழைப்பிதழ் வழங்கிய கலெக்டர்!

## 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி!!

**தென்காசி, மார்ச். 29:**
தென்காசி அருகே இலத்தூரில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி சீர்வரிசையுடன் தேர்தல் திருவிழா அழைப்பிதழ் மாவட்ட ஆட்சியர் கமல்கிஷோர் பொதுமக்களுக்கு வழங்கி அழைப்பு விடுத்தார். தென்காசி மாவட்டம், கடையநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இலத்தூர் பகுதியில்மாவட்டநிர்வாகம் மற்றும் மகளிர்திட்டம் சார்பில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி மேளதாளம், சீர்வரிசை பொருட்களுடன் வாக்காளர்களின் வீடுகளுக்கே சென்று தேர்தல் திருவிழா அழைப்பிதழை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவர் கமல்கிஷோர்., வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

பின்னர் அவர் கூறியதாவது:

சட்டமன்ற தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இலத்தூர் பகுதியில் தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி மேளதாளம், சீர்வரிசை பொருட்களுடன் வாக்காளர்களின் வீடுகளுக்கே சென்று தேர்தல் திருவிழா அழைப்பிதழ் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், தென்காசி காசிவிஸ்வநாதர் திருக்கோவில் வளாகத்தில் டிரோன்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி பொதுமக்கள் முன்னிலையில் வாக்காளர் தின உறுதிமொழி ஏற்கப்பட்டது. ஏப்ரல் 23 அன்று பொதுமக்கள் தங்கள் வாக்கினை வாக்குச்சாவடி மையத்திற்குச் சென்று வாக்குப்பதிவு செய்து ஜனநாயக கடமையை ஆற்றிடுவதுடன், தங்களுடைய உறவினர்கள் மற்றும் அண்டை வீட்டினரிடம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும்

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்வில், மகளிர் திட்ட இயக்குநர் அபிதா ஹனீப் , மாவட்ட சமூக நல அலுவலர் மதிவனா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு அலுவலர்அலெக்ஸ், இளம் வல்லுநர் அகத்தியர், உதவித்திட்ட அலுவலர்கள் டேவிட் ஜெயசிங், பிரபாகரன், ராஜேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு 038.அரக்கோணம் (தனி) சட்டமன்றத் தொகுதி, நெமிலி வட்டம். மேலாந்துரை ஊராட்சி மற்றும்கிராமபொதுமக்கள்மற்றும்விவசாயிகள்அனைவரும்100%சதவீதம்வாக்குப்பதிவு குறித்து தேர்தல் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கினார். உடன் இணை இயக்குநர் வேளாண்மை அசோக்குமார், திட்ட இயக்குனர் மகளிர் திட்டம் செந்தில் குமரன், உதவி இயக்குனர் வேளாண்மை அருணா குமாரி, உதவி திட்ட அலுவலர்கள் வெங்கடேசன், ரமேஷ், வட்டாட்சியர் வெங்கடேசன், விவசாயி ரங்கநாதன் மற்றும் பொதுமக்கள் விவசாயிகள் உள்ளனர்.

# மகளிருக்கு மாதவிடாய்கால விடுப்பு! புதிய அரசு பரிசீலிக்குமா?

## ஆயக்குடி மரத்தடி மையம் கோரிக்கை!



தமிழகத்தில் வருகிற ஏப்ரல் 23ல் 17 வது சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்கிறது. மே மாதம் முடிவுகள் அறிவிக்கபட்டு புதிய அரசு பதவி ஏற்கவுள்ளது.

மகளிர் பருவம் தொடும் காலம் முதல் முதுமை பெரும் வரை மாதவிடாய் சிரமங்களை மகளிர்மட்டுமல்ல ஆண்களும் வீடுகளில் உணரக்கூடிய விசயமே. மாதவிடாய் காலங்களில் மகளிர் படும் அவதிகள்,உடல் உபாதைகள் அந்த 3 நாட்கள் பெரியதண்டனையாகவே மகளிர் கருதும் நிலை உள்ளது.

அது மட்டுமின்றி அரசு தொடர்ந்து அரசு பணிகளை வழங்கி வருவதால் பெரும்பாலான துறைகளில் மகளிரே அதிக அளவில் பணி நியமனம் பெற்று வருவதையும் காண முடிகிறது. பள்ளி, கல்லூரிகளிலும் அதிக அளவில் பெண்கள் பயிலுவதை காண முடிகிறது.

மாதவிடாய் காலங்களில் பெண் குழந்தைகளுக்கு அரசு இலவச நாப்கின்களையும் வழங்கி வருவது வரவேற்கதக்கதே. ஆனால் பணிபுரியும் மகளிருக்கு மாதவிடாய் விடுப்பு என்ற நிலை இன்னு அமலாக்க படவில்லை.இது குறித்து சிலர் நீதி மன்றங்களில் வழக்குகளையும் தொடுத்துள்ளனர். சில நாடுகள் இதற்கு சட்டமே இயற்றியுள்ளதை காணமுடிகிறது.

நமது தாய் திரு நாட்டில் கூட கேரளா,ஒடிசா, கர்நாடக உள்ளிட்ட மாநிலங்கள் விடுப்புகளை நடை முறை படுத்தியுள்ளது. எனவே மகளிர் நிலையை அறிந்து அமையவுள்ள புதிய அரசு மாதவிடாய் விடுப்பை அமல் படுத்தபரிசீலனைசெய்ய வேண்டும் என பழனி ஆயக்குடி மரத்தடி மையம் சார்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இராமநாதபுரத்தில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், பொதுமக்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கி 100% வாக்களித்திட வேண்டுமென கேட்டுக் கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் (தேசிய நெடுஞ்சாலை) புகாரி, இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் செ.ஹபிபூர் ரஹ்மான் அவர்கள் ஆகியோர் உள்ளனர்.

### மேலூர் அருகே

# கண்மாயில் மீன் பிடித்திருவிழா!

## மக்கள் போட்டி போட்டு மீன்களை பிடித்து சென்றனர்!!

மேலூர்,மார்ச்.29–

மேலூர் அருகே வெள்ளரிப்பட்டி கிராமம் உள்ளது,இங்குள்ள பெரிய கண்மாயில் நல்ல மழை பொழிந்து மீண்டும் விவசாயம் செழிக்க வேண்டி பாரம்பரிய வழக்கப்படி இன்று காலை மீன் பிடி திருவிழா நடைபெற்றது



மேலூர் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த சருகுவலையபட்டி, திருவாதவூர், வெள்ளலூர்,அழகாபுரி,மாங்குளம், அ.வள்ளாலபட்டி கிடாரிப்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த ஆண்கள், பெண்கள் என ஆயிரக்கணக்கானோர் இரவோடு, இரவாக வந்து கண்மாய் கரையை சுற்றிலும் தயாராக கூடி இருந்தனர்,

சிலர் அருகே உள்ள சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி, திண்டுக்கல் மாவட்டம் நத்தம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் வாகனங்களில் வந்திருந்தனர்,

அதிகாலையில் கிராம பெரியவர்கள் அங்குள்ள தெய்வங்களை வணங்கி மீன் பிடிக்க துண்டு வீசி அனுமதி வழங்கியதையடுத்து

கண்மாயில் இறங்கிய பொது மக்கள் தாங்கள் கையோடு கொண்டு வந்திருந்த கச்சா, வலை, ஊத்தா, உள்ளிட்ட உபகரணங்களை கொண்டு போட்டி போட்டு மீன்களை பிடிக்க தொடங்கினர், கெண்டை, கெழுத்தி,கட்லா,ரோகு, விரால்,சிலேபி,என பல்வேறு வகையிலான நாட்டு மீன்கள் சிக்கின,சிறிய அளவிலான மீனிலிருந்து, 2 கிலோ,3 கிலோ எடை கொண்ட மீன்கள் வரை பிடிபட்டன,

# பாப்பாகுடி நடுநிலைப்பள்ளியில் 70 ஆம் ஆண்டு விழா!

திருப்பத்தூர்,மாச்.29

சிவகங்கை மாவட்டம் பாப்பாகுடி நடுநிலைப் பள்ளியில் நேற்று முன்தினம் 70 ஆவது ஆண்டு விழா நடைபெற்றது.

பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு தலைமை ஆசிரியர் ஜான்கென்னடிதலைமை வகித்தார். பள்ளி கல்விக் குழுத் தலைவர் எஸ்.பிரசன்னவெங்கடேஷ் முன்னிலை வகித்தார். விழாவின் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட பள்ளிச் செயலர் என்.பி.சுப்பிரமணியன் தனது முன்னோர் 70 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்த இப்பள்ளிக்கு உறுதுணையாக இருநது வரும் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு நன்றி கூறினார். தொடர்ந்து கல்வி மற்றும் விளையாட்டுப்போட்டிகளில் முதன்மை பெற்ற மாணவர்களை பாராட்டி நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தார். மேலும் சையதலிபாத்திமா, சீதாராம்,துரை உள்ளிட்ட பள்ளி ஆசிரியர்கள், மக்கள் நலப் பணியாளர் முத்தையா, மற்றும் பெற்றோர்கள், கலந்து கொண்டனர். விழாவில் பள்ளிக்குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. முன்னதாக அனைவரையும் ஆசிரியர் பாலமுருகன் வரவேற்றார். விழா முடிவில் ஆசிரியை நான்ஸிவிமலா நன்றி கூறினார்.



# திருப்பத்தூரில் ஸ்ரீ ராம நவமி உற்சவம்!

திருப்பத்தூர்,மாச்,29

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஸ்ரீ நின்ற நாராயண பெருமாள் ஆலயத்தில் ராமநவமியையொட்டி சிறப்பு பூஜை வழிபாடு நடைபெற்றது.

ஸ்ரீராமநவமி உற்சவத்தையொட்டி நின்ற நாராயண பெருமாள் கோயில் வளாகத்தில் உள்ள ஸ்ரீராமர், ஸ்ரீ லெட்சுமணர்சீதாதேவிக்கு பால், சந்தனம், தயிர், திருமஞ்சனம், இளநீர், மஞ்சள், உள்ளிட்ட 16 வகை திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து சிறபபு அலங்காரத்தில் மூவரும் தீபாராதனை காட்டப்பட்டு திருவாராதனமும் நடைபெற்றது. இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு ராமபிரானை வழிபாடு செய்தனர். விழா ஏற்பாடுகளை ராமேஸ்வரன்பிரியா குடும்பத்தினர் மற்றும் பரம்பரை அறங்காவலர்கள், விழாக்குழுவினர் செய்திருந்தனர்.



### சோனியா காந்தி நலம் பெற

# கோவில்களில் சிறப்பு பிரார்த்தனை!

மேலூர்,மார்ச்.29–

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் சோனியா காந்தி பூரண நலம் பெற்று விரைவில் வீடு திரும்ப வேண்டி மதுரை வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டிசார்பில் வாடிப்பட்டி குலசேகரன் கோட்டை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில்,மேரி மாதா தேவாலயம் மற்றும் பள்ளிவாசல்களில் வடக்குமாவட்டதலைவர் நூர்முகமது தலைமையில் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றது, மாவட்டதுணைதலைவர்எஸ்.எஸ்.குருசாமி, வாடிப்பட்டி வடக்கு வட்டாரத் தலைவர் ஐ.கே குருநாதன், வட்டாரத் தலைவர்கள் பழனிவேல், சுப்பாராயலு, செந்தில்குமார், காந்தி,கே.கே. ,சிவானந்தம் நகர் தலைவர் முத்துப்பாண்டி, பிசிசி ஜெயமணி, மாநில மாணவரணி பொறுப்பாளர்கள் சமயநல்லூர் சுரேஷ், வினோத், மாவட்ட அமைப்பு சாரா அணி தலைவர் சோனை முத்து,துணைத் தலைவர் வருசை முகமது, மாவட்ட இளைஞரணி தலைவர் மணி வண்ணன், மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவர் செல்லப்பா சரவணன், மாவட்ட பொதுச் செயலாளர் ராமமூர்த்தி, சக்கிமங்கலம் பாண்டி,மற்றும் நிர்வாகிகள் தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர்.






திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல்2026, நடைபெறுவதையொட்டி வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் திருமதி.க.சிவசௌந்திரவல்லி, தலைமையில் சமூக நலத்துறை பணியாளர்கள், மூன்றாம் பாலினத்தினர், மதர் தெரசா நர்சிங் கல்லூரி மற்றும் ஜெயா நர்சிங் கல்லூரி மாணவிகள் ஆகியோர் தேர்தல் விழிப்புணர்வு குறித்து வாக்காளர் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர். உடன் மகளிர் திட்ட இயக்குநர் விஜயகுமாரி, மாவட்ட சமூக நல அலுவலர் சுமதி, முன்னோடி வங்கி மேலாளர் ராஜன், உதவி திட்ட அலுவலர்கள் பாரதி, திருமேனி மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள், மூன்றாம் பாலினத்தவர், அரசு அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

### பரமக்குடி, திருவாடானை மற்றும் ராமநாதபுரம், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில்

# உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு வந்த பணம் கைப்பற்றி கருவூலத்தில் ஒப்படைப்பு!



இராமநாதபுரம், மார்ச். 29–

தமிழ்நாடுசட்டமன்ற பொதுத் தேர்தல்; 2026 யை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில்,209பரமக்குடி (தனி), 210திருவாடானை, 211இராமநாதபுரம், 212முதுகுள த்தூர் ஆகியநான்குசட்டமன்ற தொகுதியில் தேர்தல் நன்னடத்தைவிதிகள் நடைமுறையில் உள்ளதையொட்டி,தேர்தல் பறக்கும் படைமற்றும் நிலையான கண்காணிப்பு குழு நான்குதொகுதியிலும் கண்காணிப்பு பணிகளில் இருந்துவருகின்றன.

அதன் அடிப்படையில் தேர்தல் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழு வாகனதணிக்கைமேற்கொண்ட போது210திருவாடானைசட்டமன்றதொகுதியில் ரூ.2,33,500 ,212 முதுகு ளத்தூர்சட்டமன்றதொகுதியில் ரூ.54,240 மற்றும் 211இராமநாதபுரம்சட்டமன்றதொகுதியில் ரூ.3,98,370ஃ உரியஆவணங்கள் இன்றிகொண்டு வந்ததைநிலையானகண்காணிப்பு குழு கண்டறிந்துபணத்தை கைப்பற்றிகருவூலத்தில் ஒப்படைத்ததுடன்,உரியஆவணத்தைவழங்கிபணத்தைதிரும்பபெற்றுக் கொள்ளுமாறுஅறிவுறுத்தினார்கள்.

# இராமநாதபுரம் மாவட்டம், சட்டமன்ற தொகுதிகளின் திமுக வேட்பாளர்கள் பட்டியல் அறிவிப்பு!

இராமநாதபுரம் மார்ச். 29–

இராமநாதபுரம் மாவட்டத்தில், மொத்தம் நான்கு சட்டமன்ற தொகுதிகள் உள்ளது. இதில் திமுக கூட்டணியில் உள்ள காங்கிரஸ் கட்சிக்கு ஏற்கனவே திருவாடானை சட்டமன்ற தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள மூன்று சட்டமன்ற தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் நேரடியாக போட்டியிடுகிறது. அதன்படி 2026 தேர்தலில் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளராக, திமுக தேர்தல் பணிக்குழு தலைவர், தற்போது முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர், தமிழக வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் அவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதை போன்று இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளராக இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர். தற்போது இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினராக உள்ள காதர்பாட்சா முத்துரா மலிங்க ம் அவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் பரமக்குடி சட்டமன்ற தொகுதி வேட்பாளராக, போகலூர்கிழக்கு ஒன்றிய கழக செயலாளர். வழக்கறிஞர் கே, கே, கதிரவன் அவர்களுக்கு தேர்தலில் போட்டியிட முதல் முறையாக வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 164 சட்டமன்ற தொகுதிகளின் வேட்பாளர்களை திமுக தலைவர், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள முதுகுளத்தூர், இராமநாதபுரம், பரமக்குடி இந்த மூன்று தொகுதியிலும் 2021 சட்டமன்ற தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். என்பது குறிப்பிடத்தக்கது.



Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CELL: 9443699066